




# தினப்புயல்

PTN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







## இலங்கை கடற்பரப்பில் நிலநடுக்கம்



ஹம்பாந்தோட்டை கடற் கரையில் இருந்து 25.8 கிலோமீற்றர் தொலைவில் இன்று (24) அதிகாலை 12.45 மணியளவில் நிலநடுக்கம் ஒன்று பதிவாகியுள்ளது.

ரிக்டர் அளவுகோலில் 4.4 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் சுனாமி அச்சுறுத்தல் ஏதும் இல்லை என புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

## சிங்கப்பூர் வர்த்தக நீதிமன்றத்தில் இலங்கை இன்று வழக்குத் தாக்கல்

சிங்கப்பூர் வர்த்தக நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் இன்று வழக்கொன்றை தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கடற்பரப்பில் கடந்த ஆண்டு எக்ஸ் பிரஸ் பேர்ல் கப்பல் மூழ்கியதை அடுத்து ஏற்பட்ட சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு இழப்பீடு கோரி கப்பல் நிறுவனத்திற்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## இனி 12 மணி நேரம் வேலை – கடும் எதிர்ப்பு



12 மணி நேர வேலை மசோதா தமிழக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சிகள் மற்றும் திமுக கூட்டணிக் கட்சிகளின் எதிர்ப்பை மீறி நிறைவேற்றப்பட்டது.
தனியார் நிறுவனங்களில் வேலை நேரத்தை 8 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரமாக உயர்த்துவது தொடர்பான சட்ட மசோதா சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கு எதிர்க்கட்சிகளுடன், திமுக கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மதிமுக, விசிக உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. இதனைத் தொடர்ந்து குரல் வாக்கெடுப்பு மூலம் இந்த சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா தொடர்பாக விளக்கம் அளித்த அமைச்சர் தங்கம் தென்னரசு, “வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீட்டிற்காக தமிழகத்தை நோக்கி வருகின்றன. தொழிற்சாலைகளில் நெகிழ்வுத் தன்மை வரவேண்டும் என்பதற்காக, இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. எந்த தொழிலாளர்கள் விரும்புகிறார்களோ, அவர்களுக்கு மட்டுமே இது பொருந்தும். இது தொடர்பாக உயர்மட்ட குழு அமைக்கப்படும்” என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வேலை நேரத்தை அதிகரிக்கும் இந்த மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து மே 12 ஆம் திகதி தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் அறிவித்துள்ளன. சிஐடியூ மற்றும் ஏஐடியூசி, எச்.எம்.எஸ் உள்ளிட்ட தொழிற்சங்க நிர்வாகிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

## அயர்லாந்து துடுப்பெடுத்தாடுகிறது




இலங்கை மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று (24) காலி சர்வதேச மைதானத்தில் நடைபெறுகிறது.

நாணய சுழற்சியை வென்ற அயர்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 280 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மேலும், இந்த போட்டியின் பின்னர் இலங்கை டெஸ்ட் அணியின் தலைவர் பதவியை ராஜினாமா செய்வதாக திமுத் கருணாரத்ன இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு முன்னர் அறிவித்திருந்தார்.

## கேந்திர நிலையமாக மாற்றவே ஒன்றாக்கினோம்



கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கொழும்பு - வடக்கு துறைமுகத்தின் 30 வருட அபிவிருத்தி திட்டத்தினை வெளியிடுவதற்கான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நான் முதலில் அமைச்சருக்கும் இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகாரசபைக்கும் நன்றிகளை கூறிக்கொள்கிறேன். துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சினை இரு வேறு அமைச்சுக்களாக பிரிக்கலாம் அல்லவா என பலரும் கேட்கின்றனர். இருப்பினும் இலங்கையை விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை கேந்திர நிலையமாக மாற்றியமைக்க வேண்டும் என்பதே எனது நோக்கம் என்பதாலேயே இரு அமைச்சுக்களையும் ஒன்றாக்கியுள்ளோம்.

25 வருடங்களுக்கு எமது திட்டம் என்ன? அவற்றை எவ்வாறு செயற்படுத்தலாம் என்ற மாற்றுச் சிந்தனைகள் அவசியமானதாகும் என்பதோடு இலங்கையை விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை கேந்திர நிலையமாக மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது, இந்தியா, பங்களாதேஷ், ஈரான் உள்ளிட்ட மக்ரான் கடல் வலயத்தின் மேம்பாடுகள் குறித்து அவதானம் செலுத்தவேண்டியது அவசியமாகிறது. அத்தோடு சுற்றுலாத்துறை வர்த்தக செயற்பாடுகளுக்கு அவசியமான வசதிகளை கொண்டதாக ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் காணப்படுகின்றன. அடுத்த 25 வருடங்களுக்குள் வங்காள விரிகுடாவை அண்மித்த வலயத்தில் இந்தியா, பங்களாதேஷ், மலேசியா மற்றும் மியன்மார் ஆகிய நாடுகள் பெரும் அபிவிருத்திகளை எட்டும் என்ற நிலையிலிருந்து திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்தி குறித்து நாம் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கிறோம். அதற்கமைய திருகோணமலை துறைமுகத்தை வங்காள விரிகுடா வலயத்தின் சுற்றுலா வர்த்தகச் செயற்பாடுகளுக்கான பிரதான தளமாக மாற்றியமைக்கக்கூடிய இயலுமை பற்றி தேடியறிய வேண்டியது அவசியமாகும்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் தற்போதும் அதன் முழுமையாக கொள்ளளவுடன் இயங்கவில்லை என்பதால் அடுத்த 10 - 15 வருடங்களுக்குள் அதனை அபிவிருத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பில் விரிவாக ஆராய வேண்டியதும் அவசியமாகும். மறுமுனையில் கட்டுநாயக்க விமான நிலையத்தை மேலும் அபிவிருத்தி செய்வதோடு, மத்தல விமான நிலையத்தினை வணிக ரீதியில் மேம்படுத்த வேண்டும். இவற்றோடு வடக்கு மாகாணத்தில் பலாலி விமான நிலையத்தை திறந்துள்ளதற்கு மேலதிகமாக வட மத்திய மாகாணத்தின் உள்ளக விமான சேவைகளுக்காக ஹிங்குராங்கொட பிரதேசத்தை அபிவிருத்திச் செய்துள்ளோம்.

இதற்குள் கொழும்பு - வடக்கு துறைமுகம் பெருமளவான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ள அதேநேரம் அதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலான அறிக்கையொன்றை துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையின் ஆலோசகர்கள் என்னிடம் கையளித்துள்ளனர். அதற்காக நாம் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஈரானின் அபிவிருத்தி திட்டமிடல்கள் பற்றி நாம் வெகுவாக அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகும். ஏனெனில் இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட மேற்படி மூன்று நாடுகளினதும் அபிவிருத்தியின் மீதே கொழும்பு துறைமுகத்தின் கொள்ளளவு தங்கியுள்ளது. எமக்குள்ள TUS, கொள்கலன்கள், பிரிவுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேற்படி விடயங்கள் தீர்மானிக்கப்படும். இந்தியா 2050 ஆம் ஆண்டளவில் உலகின் மிதமிஞ்சிய சனத்தொகையை கொண்ட நாடாக மாறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தியாவின் குஜராத், மகாராஷ்டிரா, தென் இந்தியாவின் ஏனைய பகுதிகளும் குறிப்பாக தமிழ்நாடும் தொழில்மயமாக்கலை நோக்கி வேகமாக நகரும் நிலையில் இந்தியா தொழில்மயமாக்கலில் முன்னேற்றம் கண்டாலும் 2010 சீனா அடைந்த இலக்கை அடைய முடியாத நிலை காணப்படுகிறது. இருப்பினும் இந்தியா அந்த இலக்கை எட்டிப் பிடிக்கும். அது எண்ணியல் சார்ந்ததாக இல்லாமல் வடிவியல் சார்ந்த முன்னேற்றமாக அமையலாம். அதன்படி இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையிலான தொடர்பாடல்கள் எவ்வாறானதாக அமைய வேண்டும், படகுச் சேவைகள் வாயிலாக அந்த தொடர்பாடல்களை கட்டியெழுப்பும் இயலுமை உள்ளதா என்பதை ஆராய வேண்டும்.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக அங்குள்ள மக்களின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதால் மீன்பிடித்தல் மற்றும் சுற்றாடல் பிரச்சினை தொடர்பிலும் வெகுவாக அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகும். அத்தோடு நாம் இந்தியாவுடன் முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளின் போது, அபிவிருத்தியை துரிதப்படுத்துவதோடு, அதிகளவில் கொள்கலன்கள் அவசியம் என்று அறியப்பட்டுள்ளது. அதற்கான திட்டமிடலை இந்தியாவுடன் கலந்தாலோசித்து உருவாக்கும் பட்சத்தில் குறைந்தளவான வாய்ப்புக்கள் எவை அதிகளவிலான வாய்ப்புக்கள் எவை மற்றும் அவற்றை எவ்வாறு கண்டுகொள்ளலாம் போன்ற விடயங்களை நாம் அறியலாம். இன்று நமது நாட்டைப் போன்று பாகிஸ்தானும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டாலும், ஈரானுக்குப் பிறகு வளர்ச்சியடையக்கூடிய நாடாக விளங்குகிறது. மத்திய ஆசியாவையும் ரஷ்யாவையும் இணைக்கும் சபஹர் துறைமுகத்துடன் ஈரான் முன்னேறினால், மக்ரான் கடற்கரையை இலக்கு வைப்பர். எனவே அபிவிருத்தியின் போது மேற்படி சகல விடயங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது.

இதற்கிடையில், சீனா ஆபிரிக்காவுடன் இணைந்து ஆபிரிக்காவின் கிழக்கிலிருந்து மேற்கு வரை ரயில் பாதையைத் அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. அவற்றில் ஒன்று கென்யாவிலிருந்து மேற்கு ஆபிரிக்கக் கடற்கரைக்கும், மற்றொன்று கொங்கோ வழியாகவும் செல்லும் என்பது குறித்தும் நாம் அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகும். அதற்கமைய வலயத்தின் அனைத்து விநியோக மற்றும் போக்குவரத்துச் செயற்பாடுகள் மாற்றமடையும் என்பதால் இலங்கையை விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை கேந்திர நிலையமாக மாற்றியமைப்பதற்கு அவசியமான வேலைத்திட்டத்தினை உருவாக்க வேண்டும். அதனை நம்மால் செய்ய முடியும் என்பதோடு நாம்மால் முன்னேறிச் செல்ல முடியும் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். இது தொடர்பாக அமைச்சர் உட்பட நீங்கள் அனைவரும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நான் மீண்டும் நன்றி தெரிவிக்கிறேன் என ஜனாதிபதி தெரிவித்தார்.

## முதல் தடவையாக சாய்ந்தமருதில் தமிழ் - சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் விளையாட்டு நிகழ்வுகள்





சாய்ந்தமருதின் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ் - சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் விளையாட்டு நிகழ்வுகள் சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில் 2023.04.23 ஆம் திகதி பௌசி விளையாட்டு மைதானத்தில் மிகக் கோலாகலமாக இடம்பெற்றது. பாரம்பரிய புதுவருட விளையாட்டுக்கள் மற்றும் நடன நிகழ்வுகள் என களைகட்டியிருந்த நிகழ்வு. சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜயந்த ரத்னாயக்க கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்ததுடன் இலங்கையில் தமிழ் - சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் விளையாட்டு நிகழ்வுகள் ஒரே காலப்பகுதியில் ஒரே குடையின் கீழ் இடம்பெறுவது இனங்களுக்கிடையே அன்னியோன்யத்தை ஏற்படுத்தும் என்று தெரிவித்தார்.

கௌரவ அதிதிகள் வரிசையில் கல்முனை பொலிஸ் பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.வுட்டிக்க மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் ஆகியோர் கலந்துகொண்டதுடன் விஷேட அதிதியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பொறியலாளர் ஏ.எல்.எம்.பாறூக் கலந்து சிறப்பித்ததுடன் பிரதேச முக்கியஸ்தர்கள். விளையாட்டு வீரர்கள். சிறுவர்கள். பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். **(நூருல் ஹுதா உமர்)**

## இன்று மழையோ பெய்யக் கூடிய சாத்தியம்



கிழக்கு. ஊவா. வடக்கு. வடமத்திய. சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல் மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (வளிமண்டலவியல் திணைக்களம்)

## வடகொரிய ஏவுகணையை சுட்டுவீழ்த்த உத்தரவு




வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. தென்கொரியா. அமெரிக்கா. ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து போர் பயிற்சியில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஏவுகணை சோதனை நடத்துகிறது. சமீபத்தில் ஜப்பான் கடலை நோக்கி ஏவப்பட்ட ஏவுகணையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனால் ஜப்பான் தீவில் உள்ள மக்களை பாதுகாப்பான இடங்களில் பதுங்கி இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் ஏவுகணை ஜப்பான் பகுதிக்குள் விழவில்லை. இந்த நிலையில் வடகொரியாவின் ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தவும். ஏவுகணை இடைமறிப்பு கருவிகளை செயல்படுத்தவும் தயாராக இருக்கும்படி ராணுவத்துக்கு ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக ஜப்பான் மந்திரி யசுகாசு ஹமாடா. ராணுவத்திடம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளுக்கு எதிராக அழிவுகரமான நடவடிக்கைகளுக்கு உத்தரவிட வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்ததாக பாதுகாப்பு அமைச்சகம் கூறியது.

## நெடுந்தீவு படுகொலை - சந்தேக நபரை தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி



நெடுந்தீவில் வயோதிபர்கள் ஐவரை கொடூரமாகக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 2 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் அனுமதியளித்தது.

சந்தேக நபர் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அதன்போது சந்தேக நபர் கொலைக்கு பயன்படுத்திய கத்தி உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் மீட்கப்படவேண்டும் என்பதுடன் மேலதிக தகவல்களை பெறவேண்டும் என்பதனால் ஒரு வாரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்திருக்க அனுமதி கேட்டு யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர். விண்ணப்பத்தை ஆராய்ந்த மன்று இரண்டு நாள்கள் அனுமதியளித்ததுடன், சந்தேக நபரை நாளைமறுதினம் மன்றில் முற்படுத்த உத்தரவிட்டது.

இதேவேளை, ஊர்காவற்றுறை பொலிஸாரின் அசமந்தத்தினால் சந்தேக நபரை கைது செய்வதில் தாமதம் ஏற்பட்டது என்று யாழ்ப்பாணம் மாவட்ட மூத்த பொலிஸ் அதிகாரி கவலை வெளியிட்டார். எனினும் புங்குடுதீவு இளைஞர்களின் முயற்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவான தமிழ் பொலிஸ் குழுவின் துரித முயற்சியினால் கொலைச் சம்பவம் நடைபெற்று 24 மணிநேரத்துக்குள் கொலையாளியை கைது செய்ய முடிந்ததாக அவர் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தில் பல்வேறு குற்றச்செயல்கள் தமிழ் பொலிஸ் அதிகாரிகள், தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் முன்னின்று துரித விசாரணைகளை முன்னெடுப்பதை பொலிஸ் தலைமையகம் உள்ளிட்ட பொலிஸ் உயர்மட்டம் வரவேற்பதாகவும் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரி பாராட்டினார்.

## பத்து வீடுகள் கையளிக்கும் நிகழ்வு அம்பாறை அரசாங்க அதிபரினால் தொடங்கி வைப்பு



நளீர் பௌண்டஷன் அமைப்பின் பத்தாவது ஆண்டை முன்னிட்டு வசதிகுறைந்த தேவையுடைய மக்களுக்கு பத்து வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் முதலாவது வீட்டை கையளிக்கும் நிகழ்வும். இரண்டாவது வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் நளீர் பௌண்டஷன் ஸ்தாபகர் ஏ.எம். நளீரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் நளீர் பௌண்டஷன் தலைவர் எம்.ஏ. ரஹீம் தலைமையில் இடம்பெற்றது.

அவுஸ்திரேலிய சிட்னி பிரதர்ஸ் நிதியனுசரணையில் சாளம்பெங்கேணி நான்கில் அமைக்கப்பட்ட இந்த வீட்டை கையளிக்கும் நிகழ்விலும். சாளம்பெங்கேணி மூன்றில் அமைக்கப்பட உள்ள வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்விலும். அம்பாறை அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீட்டின் உரிமையாளர்களிடம் வீட்டை கையளித்தார். இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக நாவிதன்வெளி உதவி பிரதேச செயலாளர் பீ.பிரணவரூபன். விசேட அதிதியாக நாவிதன்வெளி பிரதேச செயலக கணக்காளர் கே.றிஸ்வி யஹசர் அவர்களும் கலந்து கொண்டார். மேலும் நளீர் பௌண்டஷன் அமைப்பின் செயலாளர் ஏ.எல். றிஸான். பொருளாளர் எம்.சி.பயாஸ். உப தலைவர் ஏ.எல்.எம்.நௌபர் உட்பட நிர்வாகிகள். அங்கத்தவர்கள். ஊர்பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். **(நூருல் ஹுதா உமர்)**

## பாடசாலை மாணவர்களுக்கான அறிவித்தல்

நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக பாடசாலை மாணவர்கள் பின்பற்ற வேண்டிய தொடர் வழிகாட்டல்களை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது. இது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும். இது தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு பாடசாலை அதிபர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. அதிக வெப்பநிலையுடன் கூடிய காலநிலை நிலவும் சந்தர்ப்பங்களில் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும் என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பாடசாலை அதிகாரிகளுக்கு அறிவிக்கவும் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும். பாடசாலை நடவடிக்கைகளின் போது. வெப்பமான நாட்களில் மாணவர்கள் வெளிப்புற அல்லது விளையாட்டு மைதானத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும். இடைவேளையின் போது மாணவர்கள் வெளியில் நேரத்தை செலவிடுவதையும் விளையாட்டுகளை விளையாடுவதையும் தவிர்க்க வேண்டும். தண்ணீர் அருந்துவதும். களைப்பைப் போக்க இரண்டு குறுகிய கால இடைவேளையை எடுத்துக் கொள்வதும் சிறந்தது என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசியமற்ற சந்தர்ப்பங்களில் மாணவர்களை பாடசாலையை விட்டு அனுப்புவதைத் தடுக்க வேண்டும் என்றும். அதிக வெப்பம் உள்ள நாட்களில் விளையாட்டு போட்டிகள் மற்றும் பயிற்சியை நிறுத்த வேண்டும் என்றும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள வழிகாட்டுதல் வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ளது.